Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 166 | உள்ளூர் - 15.06.2026 திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 166 | வெளியூர் - 16.06.2026 செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**கஜகேசரி யோகம் வந்தாச்சு... இவர்களுக்கு அதிர்ஷ்ட மழை..!** | **யூ.பி.எஸ்.சி. 546 காலியிடங்கள்!** | **தவெகவை மையம் கொள்ளும் மாற்று கட்சியினர்!** | **மீன்பிடி தடைக்காலம் நிறைவு!**



பிரான்ஸின் நீஸ் நகரில் 'பாரதத்தின் புதுமை கண்டுபிடிப்புகள்' மாநாடு நேற்று தொடங்கியது. இதையொட்டி அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பிரதமர் மோடியும், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரானும் பார்வையிட்டனர்.

# போர் பதற்றம் தணிந்தது:

# இறுதியான அமெரிக்கா - ஈரான் அமைதி ஒப்பந்தம் ஜெனீவாவில் வெள்ளிக்கிழமை கையெழுத்து

## ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்படுகிறது!

வாஷிங்டன், ஜூன். 15–

பாகிஸ்தான், கத்தார், சவுதி அரேபியா, துருக்கி உள்பட பல்வேறு நாடுகளின் முயற்சியால் ஈரான் , அமெரிக்கா இடையே அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. அமைதி ஒப்பந்தப்படி இரு நாடுகளும் மோதலை நிரந்தரமாக கைவிட வேண்டும். ஈரான் துறைமுகங்களை முடக்கியுள்ள அமெரிக்க படைகள் உடனடியாக திரும்பப்பெறப்பட வேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும். இது கச்சா எண்ணெய் சர்வதேச சந்தையில் விற்பனைக்கு வர வழிவகுக்கும். இந்த அமைதி ஒப்பந்தம் வரும் வெள்ளிக்கிழமை (19ஆம் தேதி) சுவிட்சர்லாந்தில் வைத்து அதிகாரப்பூர்வமாக கையெழுத்தாக உள்ளது.




இந்த ஒப்பந்தப்படி, அனைத்து தரப்பும் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான 60 நாட்களில் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் இரு தரப்பும் முழுமையாக அமல்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் இந்த சிறப்பான ஒப்பந்தம் இப்பகுதி முழுமைக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் கொண்டுவரும் எனக் கூறியிருக்கிறார். ஈரானுடன் அமைதியை ஏற்படுத்த பல அதிபர்கள் முயற்சி செய்தனர் ஆனால் தன்னால்தான் அது சாத்தியப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்.

வெள்ளிக்கிழமை அன்று ஒப்பந்தம் கையெழுத்து ஆவதை தொடர்ந்து கன்னி வெடிகளை அகற்றும் பணிகளுக்காக ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்படும் எண்ணெய் விநியோகம் நடைபெறும் எனக் கூறியிருக்கிறார்.

இதற்காக ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க படைகளின் முற்றுகை உடனடியாக அகற்றப்படும் என அவர் தெரிவித்திருக்கிறார் எனவே வரும் வெள்ளிக்கிழமை முதல் ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்படுவது உறுதியாக இருக்கிறது ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளில் இருந்து வழக்கம் போல கச்சா எண்ணெய் விநியோகம் நடைபெறும். இதனால் இந்தியாவிற்கு கச்சா எண்ணெய், எல்பிஜி, உரம் ஆகியவை சீராக கிடைக்கும்.

# மகளிர் உரிமைத்தொகை ஜூன் மாத ரூ.1000 வரவு!

சென்னை, ஜூன். 15–

தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை,ஜூன் மாத தவணைத்தொகை ஆயிரம் ரூபாய் இத்திட்டத்தில் பயனாளிகளாக இருக்கும் 1.31 பெண்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மாதந்தோறும் 14 அல்லது 15 ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு இந்த தொகையை வரவு வைப்பதை வழக்கமாக வைத்துள்ளது. அதன்படியே இம்மாதமும் உரிமைத்தொகை பெண்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டது.






தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், இந்திய அரசின் "கீர்த்தி சக்ரா" விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரத்திற்கு பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் வெளிப்படுத்திய அசாத்திய வீர தீரச் செயலைப் பாராட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 48 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் த. சரத்குமார், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத்துறை சிறப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் எ.சுந்தரவல்லி, முன்னாள் படைவீரர் நலத்துறை இணை இயக்குநர் மேஜர் எம். சுரேஷ், இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அ. மீனாட்சி சுந்தரம் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# முக்கிய துறைகளில் டெண்டர் முறைகேடு; ஆய்வு செய்ய ரகசிய குழுக்கள் அமைப்பு!

சென்னை, ஜூன். 15–

தி.மு.க., ஆட்சியில், முக்கிய துறைகளில் நடந்துள்ள, 'டெண்டர்' முறைகேடு குறித்து ஆய்வு செய்ய, அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய, ரகசிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில், நகராட்சி நிர்வாகம், வருவாய், மக்கள் நல்வாழ்வு, தொழில், ஊரக வளர்ச்சி, நீர்வளம், வேளாண்மை, பொதுப்பணி, நெடுஞ்சாலை, மின்சாரம், கூட்டுறவு, பள்ளிக்கல்வி, உயர்கல்வி, கால்நடை பராமரிப்பு உள்ளிட்ட 41 துறைகள் உள்ளன. இவற்றில் முக்கிய துறைகளுக்கு, ஆண்டுதோறும் பட்ஜெட்டில், 20,000 முதல் 40,000 கோடி ரூபாய் வரை, ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதியில், மக்களுக்கான நலத்திட்ட உதவிகள், மானியங்கள் வழங்குவது, கட்டமைப்புகளை ஏற்படுத்துவது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகள் அனைத்தும், ஒப்பந்ததாரர்கள் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக, தகுதி அடிப்படையில் ஒன்று முதல் ஐந்து தரத்தில், ஒப்பந்ததாரர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு உள்ளது. அதன்படி, லட்சங்களில் துவங்கி பல கோடி ரூபாய் வரையிலான பணிகளை ஒப்பந்த தாரர்கள் மேற்கொள்கின்றனர்.

தி.மு.க., ஆட்சியில், பல துறைகளில் அமைச்சர்களாக இருந்தவர்கள், தங்கள் பினாமிகளை ஒப்பந்ததாரர்களாக நியமித்து பணிகளை மேற்கொண்டனர். சில அமைச்சர்கள், குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் பணிகளை வழங்கி, அதற்கான கமிஷனை கறாராக பெற்றுக் கொண்டனர்.

பணிகள் தொடங்கும் முன்பே, முன்பணமாக கமிஷனை பெற்று, பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு துறையில் உள்ள அதிகாரிகளும் உடந்தையாக இருந்தனர். ஒவ்வொரு பணிக்கும், 20 முதல் 40 சதவீதம் வரை கமிஷன் கைமாறியது. த.வெ.க., அரசு பொறுப்பேற்ற பின், முக்கிய



துறைகளில் நடக்கும், கமிஷன் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க, முதல்வர் விஜய் முடிவெடுத்துள்ளார்.

இது தொடர்பாக, துறையில் உள்ள அமைச்சர்களுக்கும், செயலர்களுக்கும், பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார். 'டெண்டர்' விவகாரங்களில் அமைச்சர்களின் தலையீடு இருக்கக் கூடாது என, அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

சட்டசபை கூட்டம் 18ம் தேதி தொடங்க உள்ள நிலையில், முன்னாள் அமைச்சர்களுக்கும், அரசுக்கும் பதிலடி தரும் வகையில், பல்வேறு புள்ளி விபரங்களை சேகரிக்க, முதல்வர் உத்தர விட்டுள்ளார். அதன்படி, தி.மு.க., ஆட்சியில், பல்வேறு துறைகளில் நடந்த, 'டெண்டர்' முறைகேடுகள் குறித்து விசாரிக்க ரகசிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

துறையில் உள்ள நேர்மையான அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை தேர்வு செய்து, இந்த குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. துறையின் செயலர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில், இக்குழுவினருடன் முதற்கட்ட ஆலோசனை நடத்தியுள்ளனர். 'டெண்டர்' முறைகேடுகள் குறித்து, பல்வேறு தகவல்களை, இக்குழுவினர் திரட்ட தொடங்கி உள்ளனர். இது தொடர்பான விரிவான அறிக்கைகள், அந்தந்த துறை செயலர்கள் வாயிலாக, முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளன.




# அமெரிக்காவில் விபத்தில் சிக்கிய விமானம்; 12 பேர் உயிரிழப்பு!


வாஷிங்டன், ஜூன். 15–

அமெரிக்காவின் மிசோரி மாகாணம் பேட்ஸ் நகரில் உள்ள விமான நிலையத்தில் இருந்து சிறிய ரக விமானம் புறப்பட்டது. வானத்தில் இருந்து குதித்து சாகசம் செய்யும் ஸ்கை டைவிங் வீரர்கள் ஏற்றி சென்ற விமானம் திடீரென வயல்வெளியில் கீழே விழுந்து நொறுங்கி விபத்தில் சிக்கியது. இந்த விமான விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். வயல்வெளியில், புகை மண்டலத்தால் சூழப்பட்டு கிடக்கும் விமானத்தின் காட்சிகள் இணையதளத்தில் வெளியாகியுள்ளது. விபத்து குறித்த தகவல் அறிந்ததும் விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தலையங்கம் மதுரை மணி
திங்கட்கிழமை 15.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 01-ம் தேதி

# இந்தியர்களே இப்போதாவது கண் விழித்து கொள்ளுங்கள்!




விசா கட்டுப்பாடுகள், இந்தியர்களை வேற்று கிரகவாசிகள் என கூறுவது என அமெரிக்கா தொடர்ச்சியாக இந்தியர்களை சீண்டி வருகிறது. இந்த சூழலில் அமெரிக்க அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பு உத்தரவின்படி, ஆந்த்ரோபிக் (Anthrop–ic) நிறுவனம் தனது அதிநவீன AI மாடல்களான Fable 5 மற்றும் Mythos 5 ஆகியவற்றை வெளிநாட்டினர் அதாவது அமெரிக்காவிற்குள் இருக்கும் மற்றும் வெளியே இருக்கும் பிற நாட்டவர்கள் பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளது. இந்த மாடல்களில் உள்ள பாதுகாப்புக் குறைபாடுகளைப் பயன்படுத்தி தவறான வழிகளில் இயக்க முடியும் என்ற சந்தேகத்தின் பேரில் அமெரிக்க அரசு இந்தத் தடையை விதித்துள்ளது.

இந்த நடவடிக்கை ௱இந்தியாவின் தொழில்நுட்பத் துறை கண் விழிக்க வேண்டிய நேரம் இது .ஒரு நாட்டின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பு என்பது இப்போது முழுமையாக தொழில்நுட்பத்தைச் சார்ந்துதான் உள்ளது. முக்கியமான தொழில்நுட்பங்களுக்காக இனி நாம் மற்ற நாடுகளையோ அல்லது உலகமயமாக்கல் கொள்கையையோ நம்பியிருக்க முடியாது. இந்தியா தன்னுடைய சொந்த பாதையை தானே தேடி கொள்ள வேண்டும்.இந்தியா போன்ற நாடுகள் வெளிநாட்டு AI நிறுவனங்களை நம்பியிருப்பதைத் தவிர்க்க வேண்டும். நமக்கு விற்கவே விரும்பாத ஒருவருக்கு நாம் ஏன் பணம் கொடுக்க வேண்டும் .

இந்திய அரசாங்கமும் நிறுவனங்களும் பெரிய வெளிநாட்டு மாடல்களை நம்புவதை விட்டுவிட்டு, இந்திய மற்றும் பிற ஓபன்–சோர்ஸ் சிறிய AI மாடல்களைப் பயன்படுத்தி, அவற்றை நமது தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும் .அதிநவீன AI மாடல்களை உருவாக்குவதற்கு 100 பில்லியன் டாலருக்கும் மேல் பெருமளவிலான நிதி தேவைப்படுகிறது. அதேபோல, அதற்குத் தேவையான அதிநவீன GPU–க்களுக்கு அமெரிக்கா போன்ற நாடுகள் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் அவற்றை வாங்குவதும் கடினம்.

இந்த சவால்களைச் சமாளிக்க,. உலகமயமாக்கல் குறித்த எண்ணத்தில் மூழ்கி இருப்பவர்கள் கண் விழித்து கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது.

# வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி...!






திருப்பூர், ஜூன். 15–

திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பாலமுருகன் அவர்கள் மண்ணரை பகுதிக்கு உட்பட்ட

34 வார்டில் வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நேற்று நன்றி தெரிவிக்கும் விழாவில் திறந்த வெளி வாகனத்தில் நன்றி தெரிவித்தார் மேலும் 34 வது வார்டு பொதுமக்களின் அடிப்படை தேவைகளை விரைவில் நிறைவேற்றி தருவதாகவும் பொதுமக்களுக்கு எந்த ஒரு தேவையாக இருந்தாலும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளை தொடர்பு கொண்டு தகவலை தெரிவிக்கலாம் என அவர் தெரிவித்தார் மேலும் இந்த நிகழ்வில் மாவட்ட மண்ணரை பகுதி 34 வது வார்டு நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பெரும் திரளாக பங்கேற்றனர்...



மேலூர் அருகே கல்குவாரியை மூடக்கோரி பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர். கச்சிராயன்பட்டி புதூர் பகுதியில் இயங்கிவரும் கல்குவாரியால் மக்களுக்கு பாதிப்பு என புகார் தெரிவிக்கின்றனர். கற்களை சாலையோரம் கொட்டி இடையூறு செய்வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# முதல்வர் விஜய் - சங்கீதா வழக்கு ஒத்திவைப்பு!



சென்னை, ஜூன். 15–

முதல்வர் விஜய் – சங்கீதா விவாகரத்து வழக்கு ஆக.,7க்கு ஒத்திவைக்கப்பட்டது.

தவெக தலைவரும், முதல்வருமான விஜய்யின் மனைவி சங்கீதா, தமக்கு விவாகரத்து கோரி கடந்த 2025ம் ஆண்டு டிச.24ம் தேதி செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தமக்கு விவாகரத்தும், நிரந்தர ஜீவனாம்சமும் வேண்டும் என்று சங்கீதா கோரியிருந்தார்.

இந்த வழக்கானது பிப்.26ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கு, செங்கல்பட்டு முதலாவது குடும்ப நல நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது. இந்த வழக்கு இன்று (ஜூன் 15) விசாரணைக்கு வந்தது.

அப்போது இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆன்லைனில் விசாரணைக்கு ஆஜராக கோரிக்கை விடுத்தனர். வீடியோ கான்பரன்சிங் விசாரணை இல்லை என கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது. ஆகஸ்ட் 7ம் தேதிக்கு வழக்கை ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



மதுரை மாநகராட்சி பெரியார் பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து ஆணையாளர் கௌரவ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் உதவி ஆணையாளர் திரு.பிரபாகரன் அவர்கள், உதவி செயற்பொறியாளர் திரு.முத்து அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தமிழகத்தில் காலையிலேயே பயங்கர விபத்து.. பறிபோன உயிர்கள்..!



பெரம்பலூர், ஜூன். 15–

பெரம்பலூர் அடுத்த துறையூர் சாலையில் கார், லாரி நேருக்கு நேர் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.. இன்று காலை 6 மணியளவில் பெரம்பலூரில் இருந்து அரியலூரை நோக்கி கார் ஒன்று சென்று கொண்டிருந்தது.. அப்போது டி.களத்தூர் பிரிவு பாதை அருகே, எதிரே வந்த லாரி காரின் மீது பயங்கரமாக மோதியது.. இந்த விபத்தில் சிக்கிய கார் அப்பளம் போல் நொறுங்கியது..இந்த விபத்தில் சிக்கி காரில் சென்ற சங்கர், சக்தி, விஜய் ஆகிய 3 இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.. இந்த விபத்து காரணமாக பெரம்பலூர் துறையூர் சாலையில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

# த.வெ.க., நிர்வாகிகள் மீதான வழக்குகளில் கடும் தண்டனை: பழனிசாமி வலியுறுத்தல்!

சென்னை, ஜூன். 15–

'தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மீதான பாலியல் வழக்குகளில், நியாயமான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

அவரது அறிக்கை: புதிய ஆட்சி அமைந்த நாளில் இருந்து, ஆளுங்கட்சி நிர்வாகிகள், கொடும் குற்றச்செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து உள்ளது.



சேலத்தில் த.வெ.க., நிர்வாகி மணிகண்டன், பல பெண்களை பாலியல் தொல்லைக்கு ஆளாக்கி, 'வீடியோ' எடுத்து மிரட்டியதாக கைது செய்யப்பட்ட செய்தி அதிர்ச்சி தருகிறது.

சென்னை, ஆலந்துாரில் த.வெ.க., நிர்வாகி வேம்புலி, பாலியல் வழக்கில் தேடப்பட்டு வருகிறார். இன்றைய முதல்வர் பதவி ஏற்கும்போது கூறிய ''எல்லோரும் நல்லா இருப்போம்'' என்பது இதுதானா?

தன் சொந்த கட்சி நிர்வாகிகளால், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகும்போது, எப்படி நல்லா இருக்க முடியும். உங்கள் ஆட்சியில், குற்றம் செய்யும் உங்கள் கட்சியினர் மட்டும்தான் நன்றாக இருப்பது போல் தெரிகிறது.

தன் கட்சி தலைவர் முதல்வராக இருப்பது குறித்தோ, அவர் கையில் இருக்கும் காவல் துறை மீதோ, இவர்களுக்கு எந்த பயமும் இல்லாமல் இருப்பது ஏன்.

இந்த வழக்குகளில், எந்த வித ஒளிவுமறைவோ, அரசியல் குறுக்கீடோ இன்றி, நியாயமான விசாரணை நடத்தி, குற்றவாளிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அன்னதானம் நிகழ்ச்சி!





ஜோலார்பேட்டை, ஜூன்.15–

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த புத்துக்கோவில் புத்துமாரியம்மன் ஆலயத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு வனத்துறை பொறுப்பு அமைச்சர் ரஞ்சித் குமார் புத்துக்கோவில் புத்து மாரியம்மன் ஆலயத்தில் சாமி தரிசனம் செய்து 500க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் முனுசாமி தலைமையில் நடைபெற்றது உடன் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திருப்பதி கலந்து கொண்டு அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர்.மற்றும் ஒன்றிய செயலாளர் பிரகாசம் திருப்பத்தூர் மாவட்ட கொள்கை பரப்பு இணை அமைப்பாளர் ஜெகன், மற்றும் கட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் 2 ஆயிரம் பேர் த.வெ.க.வில் இணைந்தனர்!

ஒட்டன்சத்திரம், ஜூன். 15–

அ.ம.மு.க திண்டுக்கல் மாவட்ட செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான கே.பி.நல்லசாமி தலைமையில் 2 ஆயிரம் பேர் வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் முன்னிலையில் த.வெ.கவில் இணைந்தனர். இவர்களை வரவேற்கும் விதமாக, ஒட்டன்சத்திரத்தில் த.வெ.க நிர்வாகி டாக்டர்.எம்.முத்து தலைமையில்; 500–க்கும் மேற்பட்டோர். ஒட்டன்சத்திரம் தாராபுரம் ரவுண்டான சாலையில் வெடி வெடித்து வானவேடிக்கையுடன் பேரணியாக தொடங்கி பஸ்நிலையம் வழியாக அலுவலகம் வந்தடைந்தனர்.

த.வெ.க வில் இணைந்த கே.பி. நல்லசாமி–க்கு டாக்டர்.எம்.முத்து தலைமையில் கிரேன் மூலம் ராட்சத பூ மாலை அணிவிக்கப்பட்டு கௌரவித்து பாராட்டி வரவேற்கப்பட்டது. இதில் த.வெ.க நிர்வாகிகள் டாக்டர்.எம்.முத்து, க.ஜோதிமுத்து, ஆர்.ஆர்.பேக்கரி ராஜ்கமல், விஜய், சண்முகவேல் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. த.வெ.க நிர்வாகி டாக்டர்.எம்.முத்து ஆதரவற்ற ஏழை, எளியோருக்கு சீருடை மற்றும் உணவு மாதந்தோறும் வழங்கி வருகிறார். மேலும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி மற்றும் உபகரணங்கள் வழங்கி வருவதோடு, பொதுமக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வுநிகழ்ச்சிகளையும், மருத்துவ முகாம்களையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



# த.மா.கா. கட்சி பொ.செ.யுவராஜா விலகல்!

சென்னை, ஜூன். 15–

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் யுவராஜா, அக்கட்சியில் இருந்து விலககியுள்ளார். அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்து விலகுவதாக யுவராஜா அறிவித்துள்ளார். தமாகா மாநில பொதுச்செயலராக இருந்த யுவராஜா அக்கட்சியில் இருந்து விலகியதாக ஜி.கே. வாசனுக்கு கடிதம்



எழுதியுள்ளார். 25 ஆண்டுகளாக பயணித்த அரசியலில் இருந்தே விலகுவதற்கான முடிவை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று யுவராஜா கூறியுள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும் யுவராஜா அந்தக் கட்சியிலிருந்து விலகியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் அவர் தமிழக வெற்றி கழகத்தில் இணைய உள்ளதாக செய்திகள் வேகமாக பரவி வருகின்றன. கடந்த சில நாட்களுக்கு முன்பு, சென்னை சென்ற யுவராஜா தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான புஸ்சி ஆனந்தை சந்தித்து இது தொடர்பாக பேசியதாகவும் கூறப்படுகிறது.



# கஜகேசரி யோகம் வந்தாச்சு... இந்த ராசிகளுக்கு அதிர்ஷ்ட மழை..!

இந்த மாதம் (ஜூன்) 17, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில், கடக ராசியில் உச்சம் பெற்ற குரு பகவானுடன், ராசிநாதனான சந்திரன் இணைவதால் 'கஜகேசரி யோகம்' உருவாகிறது. உச்சம் பெற்ற குருவுடன் சந்திரன் இணைவதால் இந்த யோகம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இந்த யோகத்தின் பலனைப் பெறும் ராசிக்காரர்கள் மிகுந்த செல்வாக்குடனும், உயர்ந்த நிலையிலும் இருப்பார்கள். இந்த யோகம் வருமானத்தை அதிகரிக்க உதவும். இந்தக் காலகட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள், மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் முயற்சிகள் மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவேறும். மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம் மற்றும் மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கு இந்த யோகம் மிகவும் நன்மை பயக்கும்.

**மேஷம்**

நான்காம் வீட்டில் மிகச் சிறப்பான கஜகேசரி யோகம் உருவாவதால் மேஷ ராசிக்காரர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது. வருமானம் தரும் எந்தவொரு முயற்சியும் சிறப்பாக அமையும். நிதி நிலைமை வெகுவாக மேம்படும்; பணப் பிரச்சனைகள் மற்றும் தனிப்பட்ட சிக்கல்கள் தீரும். வேலையில் பதவி உயர்வு கிடைக்கும். சொத்து தொடர்பான தகராறு சாதகமாகத் தீரும். உடல்நலம் சிறப்பாக இருக்கும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் சுமூகமாகவும் அமையும். பல நல்ல செய்திகளைக் கேட்பீர்கள்.

**மிதுனம்**

மிதுன ராசிக்கு, தன ஸ்தானத்தில் (வருமான ஸ்தானத்தில்) தனாதிபதியான சந்திரன், மிகவும் சுப கிரகங்களான குரு மற்றும் சுக்கிரனுடன் இணைவதால் 'மகாபாக்ய யோகம்' மற்றும் 'சௌபாக்ய யோகம்' ஆகியவை உருவாகின்றன. வருமானம் ஈட்டும் முயற்சிகள் 100% வெற்றி பெறும். வேலையில் பதவி உயர்வு கிடைக்கும். ஒரு நல்ல குடும்பத்தில் திருமணம் நடைபெறும். தொழில் மற்றும் வேலை நிமித்தமாக அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் செயல்பாடுகள் அதிகரிக்கும். குழந்தைகள் நலம் பெறுவார்கள்.. குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

**கடகம்**

கடக ராசியில், ராசிநாதன் (சந்திரன்) குரு பகவானுடன் இணைவதால் 'ராஜ பூஜ்ய யோகம்' உண்டாகும். ராஜ யோகங்கள் மற்றும் தன யோகங்கள் ஏற்படும். முக்கியமான சுப நிகழ்வுகள் நடைபெறும். கடன் பிரச்சனைகளில் இருந்து நிம்மதி கிடைக்கும்.. வருமானம் கணிசமாக உயரும். நிதி, தனிப்பட்ட மற்றும் உடல்நலப் பிரச்சனைகள் முழுமையாகத் தீரும். உயர்தரமானவர்களுடன் லாபகரமான தொடர்புகள் ஏற்படும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் வருமானம் கணிசமாக அதிகரிக்கும்.

**கன்னி**

கன்னி ராசிக்கு லாப ஸ்தானத்தில் அமையும் இந்தச் சிறந்த கஜகேசரி யோகம் 'ராஜ பூஜ்ய யோகத்தை' அளிக்கும். தொழில் ரீதியாக விரைவான முன்னேற்றம் ஏற்படும். பணியில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. சிறந்த வேலைக்கு மாறும் வாய்ப்பும் உள்ளது. வேலையில்லாதவர்களுக்கு எதிர்பாராத வேலை கிடைக்கும். இந்த மூன்று நாட்களில் எடுக்கப்படும் முடிவுகள் நிச்சயமாக நல்ல பலன்களைத் தரும். சொத்து மற்றும் உடைமைகள் சேரும். சொத்து தொடர்பான பிரச்சனைகள் சாதகமாகத் தீரும்.

**துலாம்**

துலாம் ராசியின் பத்தாம் வீட்டில் உச்சம் பெற்ற குருவுடன் சந்திரன் இணைவது முழுமையான 'கஜகேசரி யோகத்தை' உருவாக்கியுள்ளது. இது வருமானத்தை கணிசமாக அதிகரிக்கும். திடீர் பண வரவுக்கும் வாய்ப்புள்ளது. பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகம் (speculation) மூலம் லாபம் கிடைக்கும். கூடுதல் வருமானம் பெருகும். பணியிடத்தில் முக்கியத்துவமும் மதிப்பும் உயரும். தொழில் மற்றும் வியாபாரம் லாபகரமாக அமையும். உடல்நலம் மேம்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும்.

**விருச்சிகம்**

விருச்சிக ராசிக்குச் சாதகமான நிலையில் குருவுடன் சந்திரன் இணைவது எதிர்பாராத உயரிய நன்மைகளைத் தரும். பணியாளர்கள் மற்றும் வேலையில்லாதவர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும். பல வழிகளில் இருந்தும் வருமானம் பெருகும். பணியிடத்தில் சம்பளம் மற்றும் படிகள் கணிசமாக உயரும், அத்துடன் பதவி உயர்வும் கிடைக்கும். உயர்தரக் குடும்பத்தில் திருமணம் கைகூடும். நோய்களிலிருந்து நிவாரணம் கிடைக்கும். அரசியல் பிரமுகர்களுடனான தொடர்பு அதிகரிக்கும்.

**மகரம்**

மகர ராசியின் ஏழாம் வீட்டில் உச்சம் பெற்ற குருவுடன் சந்திரன் இணைவதால் அரிதான 'கஜகேசரி யோகம்' உருவாகிறது. இதனால் வேலை மட்டுமல்லாது, தொழில் மற்றும் வியாபாரத்திலும் வருமானம் பெருமளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது. வருமானம் ஈட்டும் முயற்சிகளில் பெரும் வெற்றி காண்பீர்கள். எதிரிகள், நோய்கள் மற்றும் கடன் பிரச்சனைகளிலிருந்து பெருமளவு விடுபடுவீர்கள். பல வழிகளில் உங்கள் வருமானம் உயரும். வீடு மற்றும் வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். திருமணம் மற்றும் வேலை தொடர்பான முயற்சிகளில் நல்ல செய்திகளைக் கேட்பீர்கள்.

**மீனம்**

மீன ராசிக்கு, ஐந்தாம் வீட்டு அதிபதியான குருவுடன் சந்திரன் இணைவது மனதின் முக்கிய விருப்பங்களை நிறைவேற்றும். நீங்கள் தொடும் காரியங்கள் அனைத்தும் பொன்னாக மாறும் (வெற்றி பெறும்). சொத்து தொடர்பான பிரச்சனைகள் சாதகமாகத் தீரும். விரும்பிய திருமண உறவு அமையும். காதல் உறவுகள் திருமணத்தில் முடியும். பணியாளர்கள் மற்றும் வேலையில்லாதவர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும். பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகம் உள்ளிட்ட கூடுதல் வருமானம் ஈட்டும் முயற்சிகள் அனைத்தும் பெரும் வெற்றியைத் தரும்.




## முதியோர் நலன் பற்றிய முக்கிய குறிப்புகள்!




1.முதியோர்களை அன்புடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்.

2.அவர்களின் உடல்நலம் குறித்து அடிக்கடி பரிசோதனை செய்ய வேண்டும்.

3.சத்தான மற்றும் சமநிலையான உணவுகளை வழங்க வேண்டும்.

4.தினசரி நடைப்பயிற்சி மற்றும் எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

5.மன அழுத்தம் ஏற்படாமல் குடும்பத்தினருடன் நேரம் செலவிடச் செய்ய வேண்டும்.

6.தனிமையைத் தவிர்க்க சமூக நிகழ்வுகளில் பங்கேற்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.

7.முதியோர் ஓய்வூதியம் மற்றும் அரசு நலத்திட்டங்களை பயன்படுத்த உதவ வேண்டும்.

8.பாதுகாப்பான மற்றும் வசதியான வாழ்விட சூழலை ஏற்படுத்த வேண்டும்.

9.மருந்துகளை சரியான நேரத்தில் எடுத்துக்கொள்ள கவனம் செலுத்த வேண்டும்.

10.அவர்களின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் மதித்து கேட்க வேண்டும்.

11.டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்த கற்றுக்கொடுத்தால் தகவல் தொடர்பு எளிதாகும்.

12.முதியோரின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பது குடும்பம் மற்றும் சமூகத்தின் பொறுப்பாகும்.

## பழனி கோவில் பஞ்சாமிர்தம், தங்கத்தேர் புறப்பாடு கட்டணத்தை உயர்த்த முடிவு!



பழனி, ஜூன். 15–

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில் பஞ்சாமிர்தம், தங்கத்தேர் புறப்பாடு கட்டணத்தை உயர்த்த திட்டமிட்டுள்ள நிலையில் இது குறித்து பக்தர்கள் ஆலோசனைகள், ஆட்சேபனைகளை ஜூலை 7–ந் தேதிக்குள் தெரிவிக்கலாம் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து கோவில் நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி முருகன் கோவிலில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும் விழா காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்களும் வருகை தருகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்கள் பிரசாதமாக பஞ்சாமிர்தம் பெற்று செல்கின்றனர். இந்த பஞ்சாமிர்தம் கோவில் நிர்வாகம் சார்பில் மலைக்கோவில் மற்றும் அடிவார பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பக்தர்களுக்கு வழங்கப்படும் 1/2 கிலோ டின் பஞ்சாமிர்தம் ஒன்றின் விலை ரூ.45, ரூ.40க்கும் மற்றும் 200 கிராம் டப்பா ரூ.20–க்கும் விற்கப்படுகிறது.

இந்நிலையில் மூலப்பொருட்கள் விலை ஏற்றம் காரணமாக பஞ்சாமிர்தம் விலை ஏற்ற கோவில் நிர்வாகம் சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ரூ.45 விற்கப்பட்டு வந்த பஞ்சாமிர்தம் ரூ.60 ஆகவும், ரூ.40க்கு விற்கப்பட்ட பஞ்சாமிர்தம் ரூ.50 ஆகவும், ரூ.20க்கு விற்கப்பட்ட பஞ்சாமிர்தம் ரூ.30 ஆக விலை உயர்த்த கோவில் நிர்வாக சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பக்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் கருத்து கேட்பு தொடர்பான அறிவிப்பு ஒன்று கோவில் தலைமை அலுவலகத்தில் ஒட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து மற்றும் ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் ஜூலை 11ம் தேதிக்குள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும் என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வார தொடக்கத்தில் தங்கம் விலை உயர்வு!



சென்னை, ஜூன். 15–

சென்னையில் இன்று 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1680 ரூபாய் அதிகரித்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 560 ரூபாய்க்கும், கிராமுக்கு 210 ரூபாய் அதிகரித்து 14,070 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு 10 ரூபாய் அதிகரித்து 280 ரூபாய்க்கும், கிலோவுக்கு 10 ஆயிரம் ரூபாய் அதிகரித்து 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# தவெகவை மையம் கொள்ளும் மாற்று கட்சியினர்!



சென்னை, ஜூன். 15–

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 23–ந் தேதி நடைபெற்ற 17–வது சட்டசபை தேர்தல் முடிவுகள் மே மாதம் 4–ந் தேதி வெளிவந்தது. 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் (தி.மு.க., அ.தி.மு.க) ஆட்சிக்கு முடிவு கட்டி, தேர்தலுக்கு புது வரவான தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. தமிழகத்தின் 12–வது முதல்–அமைச்சராக விஜய் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தேர்தல் பிரசாரத்தி ன்போது, மக்கள் மத்தியில் விஜய் பேசிய நேரத்தில், "இந்த தேர்தலில் 2 கட்சிக ளுக்கு இடையே மட்டும்தான் போட்டியே. ஒன்று.. டி.வி.கே. (த.வெ.க.), இன்னொன்று.. டி.எம்.கே. (தி.மு.க.)" என்று கூறிவந்தார். அப்போதுகூட, தேர்தல் முடிவும் அவ்வாறாக த்தான் இருக்கும் என்று யாரும் நினைக்கவில்லை. கடைசியில் அவர் சொன்னதுதான் நடந்திருக்கிறது. த.வெ.க. ஆட்சி அரியணை ஏறி இருக்கிறது. தி.மு.க. எதிர்க்கட்சிகள் வரிசைக்கு தலைமை தாங்கிறது.

**கரூர் சம்பவத்திற்கு பிறகு தொடர் நெருக்கடி**

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் பலியான சம்பவத்திற்கு பிறகு விஜய்க்கு நெருக்கடி அதிகரித்தது. ஒரு பக்கம் பிரசாரத்திற்கு அனுமதி கிடைப்பதில் சிக்கல் நீடித்த நிலையில், மற்றொரு பக்கம் சி.பி.ஐ. விசாரணையும் சென்று கொண்டிருந்தது. இதுபோன்ற தொடர் நெருக்கடிகளால், விஜய்யால் திட்டமிட்டபடி தமிழகம் முழுவதும் சென்று பிரசா ரத்தில் ஈடுபட முடியவில்லை. குறிப்பாக, தென்மாவட்டங்களுக்கு அவர் செல்லாததால், அங்கு த.வெ.க.வுக்கு வெற்றி பெரிய அளவில் கிடைக்க வில்லை. அதனால், கூட்டணி ஆட்சியை அமைக்க வேண்டிய நிலை அக்கட்சிக்கு ஏற்பட்டு விட்டது. இப்போது, ஒரு மாத கால ஆட்சியை த.வெ.க. அரசு கடந்திருக்கிறது. சட்டம் – ஒழுங்கு பிரச்சினை, பெண்களுக்கான பாலியல் துன்புறுத்தல்கள், மின் தடை பிரச்சினை போன்றவை புதிய அரசுக்கு சவாலாக நிற்கிறது. தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்சினைகளை கையில் எடுத்து அரசியல் களமாடி வருகின்றன.

**காலியாகும் அ.தி.மு.க. கூடாரம்**

இதற்கு மத்தியில், தமிழக அரசியல் களத்தில் கட்சித் தாவல் நிகழ்வுகளும் சூறாவ ளியாக சுழன்று கொண்டிருக்கிறது. எப்போதுமே, பழுத்த பழங்கள் நிறைந்த மரங்களை நோக்கித்தான் பறவைகள் கூட்டம் வரும் என்பதைப்போல, இப்போது ஆட்சியில் இருக்கும் த.வெ.க.வை நோக்கித்தான் மாற்றுக்கட்சியினர் படை யெடுத்துக் கொண்டி ருக்கின்றனர். குறிப்பாக, எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூடாரம் காலியாகிக் கொண்டிருக்கிறது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் மீதான அதிருப்தியில் மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் வெளியேறி த.வெ.க.வில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் தி.மு.க. பக்கம் சென்று கொண்டிருக்கி றார்கள்.

**பதவிகளை எதிர்பார்த்து மாற்று கட்சியினர் வருகை**

ஊழலற்ற, வெளிப்படை யான ஆட்சி என்ற நிலைப்பா ட்டில் இருப்பதாக த.வெ.க. கூறிக்கொண்டிருக்கும் நிலையில், மாற்று கட்சியினர் எந்த நிலைப்பாட்டில் வந்து அக்கட்சியில் இணை கிறார்கள் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அடுத்து, தமிழகத்தில் 3–வது இடத்தில் இருக்கும் தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருக்கி றது. தொடர்ந்து 2029–ம் ஆண்டு நாடாளு மன்ற தேர்தலையும் சந்திக்க இருக்கிறது. இடையே மாநிலங்க ளவையில் காலியாகும் எம்.பி. பதவிகளுக்கும் தேர்தல் நடைபெற இருக்கின்றது.


எனவே, பதவிகளை எதிர்பார்த்தே அ.தி.மு.க. உள்ளிட்ட பிற கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் த.வெ.க. வில் வந்து இணைகிறார்கள் என்று கூறப்படுகிறது. இது த.வெ.க. தொண்டர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. விஜய் ரசிகர் மன்ற காலத்தில் இருந்தே நாம் தொடர்ந்து பயணித்து வரும் நிலையில், தற்போது கட்சியில் இணைந்தவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டால் எப்படி? என்ற கேள்வியையும் முன்வைக்கின்றனர்.

**த.வெ.க.வினர் கருத்து**

இன்றைக்கு பதவிகளை எதிர்பார்த்து த.வெ.க.வில் இணைந்தவர்களுக்கு, அது கிடைக்காத பட்சத்தில் மீண்டும் மாற்று கட்சிகளை நோக்கி பயணிக்க தொடங்கிவிடுவார்கள் என்றும் த.வெ.க.வினர் கூறிறுகிறார்கள்.

இதனால், கட்சியில் புதிதாக இணைந்த வர்களால், பிரச்சினைகள் ஏற்படுமே தவிர, கட்சியின் வளர்ச்சிக்கான ஏணியாக இருக்கமாட்டார்கள் என்றே த.வெ.க.வினர் கருதுகின்ற னர். எனவே, மாற்று கட்சி யினரை இணைக்கும்போது கவனம் தேவை என்ற கருத்தையே த.வெக. தலை மைக்கு அரசியல் விமர்ச கர்கள் முன்வைக்கின்றனர். இல்லை என்றால், அதுவே புதிய தலைவலியை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

# ஈரான் - அமெரிக்கா அமைதி ஒப்பந்த அறிவிப்பு எதிரொலி.. பங்குச்சந்தை ஏற்றத்துடன் தொடக்கம்!



புதுடெல்லி, ஜூன். 16–

கடந்த மூன்று மாதங்களாக நீடித்து வந்த அமெரிக்கா – ஈரான் போர் முடிவுக்கு வந்துள்ளதாகவும் ஹார்முஸ் ஜலசந்தி மீண்டும் திறக்கப்படுவதாகவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சர்வதேச சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை சுமார் 4.7% க்கும் மேல் சரிந்து பேரல் ஒன்றுக்கு 83 டாலருக்கும் கீழ் குறைந்தது. இவற்றின் காரணமாக இந்தியப் பங்குச்சந்தைகள் வார தொடக்கமான இன்று ஏற்றத்துடன் வர்த்தகத்தை தொடங்கின.

மும்பை பங்குச்சந்தை குறியீடான சென்செக்ஸ் வர்த்தக தொடக்கத்தில் 1,100 புள்ளிகள் உயர்ந்து தற்போது 76,703 என்ற அளவில் வர்த்தகமாகி வருகிறது.

தேசிய பங்குச்சந்தையின் நிப்டி குறியீடு 351.10 புள்ளிகள் உயர்ந்து 23,974 என்ற புள்ளிகளை எட்டியது. பங்குச்சந்தை ஏற்றம் மற்றும் கச்சா எண்ணெய் விலை சரிவு காரணமாக, அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பும் இன்று 94.68 ஆக வலுவடைந்தது. முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை வர்த்தக முடிவில் இது 95.11 ஆக இருந்தது குறிப்பிட த்தக்கது.

## கச்சா எண்ணெய் விலை குறைந்தது; ஒரு பேரல் 84 டாலராக சரிவு!




புதுடில்லி, ஜூன். 15–

அமெரிக்கா – ஈரான் பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்பட்ட நிலையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தது. ஒரு பேரல் 84 டாலருக்கு கீழே சரிந்தது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தம் காரணமாக மத்திய கிழக்கு பதற்றங்கள் தணிந்ததன் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 4% வரை குறைந்தது.

WTI எனப்படும் அமெரிக்க கச்சா எண்ணெய் 4 சதவீதத்திற்கு மேல் குறைந்து ஒரு பேரல் 84 டாலருக்கும் கீழே சரிந்தது. அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதால், முக்கிய வர்த்தகப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தி மீண்டும் திறக்கப்படுவது சந்தையில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் சீராகும் என்ற எதிர்பார்ப்பில் விலை கணிசமாக குறைந்துள்ளது. இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 85%க்கும் அதிகமாக இறக்குமதி செய்கிறது. இந்த விலை சரிவு இந்தியாவின் அந்நிய செலாவணியை சேமிப்பதோடு, பணவீக்கத்தைக் குறைக்கவும் உதவும்.

## மீன்பிடி தடைக்காலம் நிறைவு!



சென்னை, ஜூன். 15–

மீன்பிடி தடைக்காலம் நள்ளிரவுடன் நிறைவடைந்தது. எனவே தமிழக மீனவர்கள் அதிகாலையிலேயே கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அதன்படி, சென்னை காசிமேடு மீன்பிடித்துறை முகம், திருவள்ளூர், செங்கல்பட்டு. விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவா ரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுச்சேரி, கரை க்கால், புதுக்கோட்டை. தூத்துக்குடி. திருநெல்வேலி, ராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்ட ங்களில் இருந்து 15 ஆயிர த்துக்கும் மேற்பட்ட விசைப்ப டகுகளில் 1 லட்சத்துக்கும் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடி க்கும் பணி களில் ஈடுபட்டு வருகின்றனர்.

# வேலை வாய்ப்பு
## யூ.பி.எஸ்.சி. 546 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC)

அறிவிப்பு எண்: 06 2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: நிரந்தரப் பணி

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 546 (ஜூனியர் சயின்டிஃபிக் ஆபீசர், சயின்டிஸ்ட் 'B', உதவி சுரங்க புவியியலாளர், விரிவுரையாளர்–I, ஸ்பெஷலிஸ்ட் கிரேடு–III, கண்காணிப்பாளர் ITI/துணை முதல்வர், மருத்துவ அதிகாரி, ஆலோசகர், ஆராய்ச்சி அதிகாரி (வரைபடம்), உதவி அரசு வழக்கறிஞர், துணை மத்திய உளவுத்துறை அதிகாரி (DCIO), மண்டல இயக்குனர், உதவி இயக்குனர் (IT), விமானப் பாதுகாப்பு அதிகாரி, பேராசிரியர், இணைப் பேராசிரியர், வேதியியலாளர், உதவி இயக்குனர் கிரேடு–II ஆகிய பதவிகள்)

பணிபுரியும் இடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 13.06.2026

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 03.07.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.upsc.gov.in/

## கும்மிடிப்பூண்டியில் 3 வயது பெண் குழந்தை பாலியல் கொடுமை!




சென்னை, ஜூன். 15–

கும்மிடிப்பூண்டியில் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து முட்புதரில் வீசப்பட்ட 3 வயது குழந்தை, சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி பகுதியில் 3 வயது பெண் குழந்தை காணாமல் போனதால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் தேடினர். அப்போது முட்புதரில் பச்சிளம் குழந்தை காயங்களுடன் உடல்நலம் குன்றி இருப்பது கண்டறியப்பட்டது. பிறகு சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் குழந்தை அனுமதிக்கப்பட்டது.

அங்கு குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது. குழந்தையை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தது தெரியவந்தது. இதனிடையே, குழந்தை பாலியல் வன்கொடுமை தொடர்பாக பீஹாரை சேர்ந்த மஞ்சி (19) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குழந்தையை புலம்பெயர் தொழிலாளர்கள் 4 பேர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

3 வயது குழந்தை வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்துக்கு, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி, அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், பாமக தலைவர் அன்புமணி, திமுக எம்.பி., கனிமொழி, உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

## நீட் மறுதேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியீடு!




புதுடில்லி, ஜூன். 15–

மருத்துவ படிப்பில் சேர 'நீட்' மறுதேர்வுக்கான ஹால் டிக்கெட்டுகளை தேசிய தேர்வு முகமை நேற்று அதிகா ரப்பூர்வமாக வெளியிட்டது.

நாடு முழுவதும் கடந்த மே 3ம் தேதி இளநிலை மருத்துவ படிப்புகளில் சேருவதற்கான 'நீட்' நுழைவுத் தேர்வு நடந்தது. இந்த தேர்வின்போது வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரை அடுத்து, மே 3ம் தேதி நடந்த 'நீட்' நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, வரும் ஜூன் 21ம் தேதி மறுதேர்வு நடக்கும் என அறிவிக்கப்பட்டது. எவ்வித முறைகேடுகளும் நடக்காத வகையில், ராணுவ கட்டுப்பாட்டுடன் மறுதேர்வை நடத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில், இதற்கான ஹால் டிக்கெட்டுகளை தேசிய தேர்வு முகமை நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது.

தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து ஹால் டிக்கெட்டுகளை மாணவர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 21ம் தேதி நடக்கும் 'நீட்' மறுதேர்வை எழுத நாடு முழுவதும் இருந்து 22.79 லட்சம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.



## இன்றைய கார்ட்டூன்






தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், அமர் சேவா சங்கத்தின் நிறுவனத் தலைவர் எஸ். ராமகிருஷ்ணன், செயலாளர் எஸ். சங்கர ராமன், செயற்குழு உறுப்பினர் அன்பு ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினார்கள்.

## சினிமா துளிகள்..!

### திருமண நாளில் கொடுத்த வாக்குறுதி: தந்தையின் கிராமத்திற்கு சென்று நிறைவேற்றிய விஜய் – ராஷ்மிகா தம்பதி!




திரையுலகில் மட்டுமின்றி நிஜ வாழ்விலும் நட்சத்திரத் தம்பதிகளாக வலம் வரும் விஜய் தேவரகொண்டா–ராஷ்மிகா மந்தானா, தெலுங்கானா மாநில அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியைத் தங்களின் சொந்தக் கிராமத்திற்கு நேரில் சென்று நிறைவேற்றியுள்ளனர்.

தெலுங்கானா மாநிலம் நாகர்கர்னூல் மாவட்டத்தில் உள்ள தும்மன்பேட்டை கிராமத்திற்கு ஞாயிற்றுக்கிழமை அன்று தம்பதியினர் சென்றனர். இக்கிராமம் விஜய் தேவரகொண்டாவின் தந்தை பிறந்து வளர்ந்த பூர்வீக இடமாகும். கடந்த பிப்ரவரி மாதம் தங்களது திருமணத்திற்குப் பிறகு, இந்த கிராமத்தில் உள்ள தங்களின் புதிய இல்லத்தில் நடைபெற்ற புதுமனை புகுவிழா மற்றும் சத்தியநாராயண விரத பூஜையின் போது, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என விஜய் – ராஷ்மிகா தம்பதி முதன்முதலில் அறிவித்திருந்தனர். அந்த அறிவிப்பை அதிகாரப்பூர்வமாகச் செயல்படுத்தவே அவர்கள் தற்போது மீண்டும் தும்மன்பேட்டைக்கு வந்துள்ளனர்.

'தி தேவரகொண்டா ஃபவுண்டேஷன்' மூலம் அச்சம்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 44 அரசுப் பள்ளிகளில் 9 மற்றும் 10–ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. கடினமான வாழ்வாதாரச் சூழ்நிலையிலும் கல்வியில் சிறந்து விளங்கிய 180 தகுதிவாய்ந்த மாணவர்களின் பட்டியலை இந்தத் தம்பதியினர் வெளியிட்டனர். வறுமை மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகள் ஒருபோதும் கல்விக்குத் தடையாக இருக்கக் கூடாது என்று உறுதியளித்த அவர்கள், தேர்வு செய்யப்பட்ட 180 மாணவர்களின் ஒட்டுமொத்த கல்விச் செலவையும் தங்களின் அறக்கட்டளையே முழுமையாக ஏற்கும் என அறிவித்தனர்.

ரசிகர்கள் இத்தம்பதிக்குச் சூட்டிய செல்லப் பெயரான 'விரோஷ்' (Virosh) என்பதை முன்னிறுத்தி, தேவரகொண்டா அறக்கட்டளையின் கீழ் திட்டத்திற்கு 'விரோஷ் ஸ்காலர்ஷிப்' (Virosh Scholarship) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## மீனாட்சி அம்மன் கோயிலில் மீண்டும் ரீல்ஸ் சர்ச்சை!



மதுரை, ஜூன். 15–

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் அலைபேசி கொண்டு செல்ல தடை உள்ள நிலையில், இளைஞர் ஒருவர் அலைபேசியில் வீடியோ எடுத்து 'ரீல்ஸ்' வெளியிட்டுள்ள விவகாரம் பக்தர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே இதுபோன்ற அத்துமீறல்கள் குறித்து எச்சரித்தும், கோயில் பாதுகாப்பு மீண்டும் கேள்விக்குறியாகியிருப்பது அம்பலமாகியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் இக்கோயில் வளாகத்தில் சிலர் முகம் சுளிக்கும் வகையில் அலைபேசியில் வீடியோ எடுத்த விவகாரத்தையடுத்து, பக்தர்கள் கோயிலுக்குள் அலைபேசி கொண்டு செல்ல உயர்நீதி மன்றம் தடை விதித்தது. அலைபேசியை கட்டணம் செலுத்தி பாதுகாக்கும் வசதியை கோயில் நிர்வாகம் ஏற்படுத்தியது. கோயிலின் நுழைவு வாயில்களில், துப்பாக்கி ஏந்திய போலீசார், மெட்டல் டிடெக்டர் சோதனை என தீவிர கண்காணிப்புக்கு பிறகே பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். இந்நிலையில், சமீபத்தில் 16 வயது சிறுமி கோயில் பொற்றாமரை குளத்தில் நடனமாடி ரீல்ஸ் வெளியிட்டதற்கு போலீசாரின் அலட்சியமே காரணம் என ஹிந்து அமைப்புகள் கண்டனம் தெரிவித்தன. தற்போது இளைஞர் ஒருவர் அதே பொற்றாமரைக் குளத்தில் சினிமா பாடலுக்கு அலைபேசியில் ரீல்ஸ் எடுத்து வெளியிட்டது மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பக்தர்கள் கூறுகையில் 'இது பக்தி ஸ்தலமா, பப்ளிசிட்டிக்கான இடமா. போலீஸ் பாதுகாப்பை மீறி அலைபேசியை இளைஞர் எப்படி கொண்டு சென்றார். பொற்றாமரைக் குளம் உள்ளிட்ட பகுதிகளில் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும். ஆகம விதிகள், பாதுகாப்பு நெறிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு, 'லைக்'குகளுக்காக கோயிலை பயன்படுத்துவோரை அறநிலையத் துறையும், போலீசாரும் இரும்புக்கரம் கொண்டு தடுக்க வேண்டும்' என்றனர்.

## எம்எல்ஏக்கள் 4 பேர் ராஜினாமா செய்த தொகுதிகளுக்கான இடைத்தேர்தலை அறிவிக்கக் கூடாது; அதிமுக வழக்கு!



சென்னை. ஜூன். 15–

எம்எல்ஏ.,க்கள் 4 பேர் ராஜினாமா செய்த தொகுதிகளுக்கான இடைத்தேர்தலை அறிவிக்கக் கூடாது என அதிமுக சார்பில் ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதிமுக எம்எல்ஏக்கள் ஜெயக்குமார், மரகதம் குமரவேல், சத்தியபாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா செய்த 4 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடத்தும் பணிகளை தேர்தல் கமிஷன் தொடங்கியுள்ளது. இந்த தொகுதிகளுக்கான இடைத்தேர்தலை அறிவிக்கக் கூடாது என அதிமுக சார்பில் ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தகுதி நீக்க நடவடிக்கைக்கு ஆளான 4 எம்எல்ஏக்கள் ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றது சட்டவிரோதம் என அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி மனுவில் கூறியுள்ளார். இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் ஜூன். 17–ல் விசாரணைக்கு வருகிறது.

## தே.ஜ., கூட்டணியிலிருந்து வெளியேறியது த.மா.கா.!




சென்னை, ஜூன். 15–

"தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி விலகுகிறது," என அக்கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் அறிவித்தார்.

த.மா.கா., மாநில செயற்குழு கூட்டம், சென்னை எழும்பூரில் உள்ள தனியார் ஹோட்டலில் நடந்தது. த.மா.கா., தலைவர் ஜி.கே.வாசன் தலைமையில் நடந்த கூட்டத்தில், மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் என, 600–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில், 'தேர்தல் தோல்விக்கு பிறகும், தே.ஜ., கூட்டணியில் தொடரலாமா, வேண்டாமா' என, ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது.

பெரும்பாலானோர், 'தே.ஜ., கூட்டணியில் தொடர வேண்டாம்' என தெரிவித்தனர். அதை ஏற்று, தே.ஜ., கூட்டணியில் இருந்து, நட்பு ரீதியாக த.மா.கா., விலக முடிவு செய்யப்பட்டது. பின், ஜி.கே.வாசன் அளித்த பேட்டி: த.மா.கா., தொடங்கி 12 ஆண்டுகளாகி விட்டன. கடந்த 2014 முதல் 2026 வரை கூட்டணி அரசியலில் பங்கேற்றுள்ளோம். கட்சியின் பொறுப்பாளர்கள், தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கம், இன்னும் நிறைவேறவில்லை. இதனால் கட்சியை மீண்டும் அடித்தளத்தில் இருந்து, பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில், கூட்டணி அவசியம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. எனவே, பெரும்பாலானோர் தெரிவித்த கருத்தின்படி, உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்படும் வரை, கட்சியின் அடித்தளத்தை விரிவுப்படுத்த உள்ளோம். அதற்காக, தே.ஜ., கூட்டணியில் இருந்து, த.மா.கா., நட்பு ரீதியாக விலக முடிவு செய்துள்ளது.

பா.ஜ., – அ.தி.மு.க., உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுடன், எங்களுக்கு எந்தவித சச்சரவோ, மனக்கசப்போ இல்லை. கூட்டணி தர்மத்தை மதித்து செயல்பட்ட கட்சியாக, தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆந்திராவில் ஆற்றில் படகு கவிழ்ந்து 4 பேர் பலி!



ஆந்திரா, ஜூன். 15–

ஆந்திர மாநிலம் பாபட்டலா மாவட்டம் அச்சம்பேட்டையை சேர்ந்தவர் சைதன்யா (வயது 28). இவர் தனது உறவினர்கள் 10 பேருடன் கோனூரில் நடைபெறும் திருவிழாவிற்காக கிருஷ்ணா ஆற்றில் படகில் சென்றார். திருவிழா முடிந்து மீண்டும் படகில் புறப்பட்டனர். அப்போது எதிர்பாராதவிதமாக படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. படகில் இருந்த 10 பேரும் ஆற்றில் மூழ்கி உயிருக்கு போராடினர். இதனைக் கண்ட கிராம மக்கள் ஆற்றில் குதித்து 6 பேரை உயிருடன் மீட்டனர். மற்ற 4 பேர் தண்ணீரில் மூழ்கினர். இதுகுறித்து போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து ஆற்றில் இருந்து சைதன்யா, ஷைனி(10), சந்தியா (9), கார்த்திக் (12) ஆகியோரை பிணமாக மீட்டனர்.

இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் சோகம் நிலவியது.




அமெரிக்க அதிபர் Donald Trump தனது 80வது பிறந்தநாளை ஜூன் 14, 2026 அன்று கொண்டாடினார். இதனை முன்னிட்டு வெள்ளை மாளிகை வளாகத்தில் சிறப்பு UFC நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர். நிகழ்ச்சி அமெரிக்காவின் 250வது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகவும் விளம்பரப்படுத்தப்பட்டது. அதே நேரத்தில், அரசு வளாகத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவது குறித்து சில அரசியல் எதிர்ப்புகளும் எழுந்தன. உலகின் பல தலைவர்களும் டிரம்புக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை அனுப்பினர். இந்த நிகழ்வு அமெரிக்க ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டு, அரசியல் மற்றும் விளையாட்டு வட்டாரங்களில் கவனத்தை ஈர்த்தது.



தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என். ஆனந்த் தலைமையில் நீர்வளத் துறையின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்தியபிரத சாகு, நீர்வளத் துறை சிறப்புச் செயலாளர் சு.ஸ்ரீதரன், நீர்வளத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர்,எஸ். கோபாலகிருஷ்ணன், நீர்வளத் துறை மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் செயல் பாட்டு தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## கூடங்குளம் அணுமின் நிலையம் முன்பு பொதுமக்கள் முற்றுகை போராட்டம்!




தூத்துக்குடி, ஜூன். 15–

அணுமின் நிலையத்தில் 255 தொழில்நுட்ப பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு தற்போது நடைபெற்று வருகிறது. இதில் நிலம் வழங்கிய குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படவில்லை என குற்றம்சாட்டிய கிராம மக்கள், இன்று காலை கூடங்குளம் பஞ்சாயத்து தலைவர் வின்சி மணியரசு தலைமையில் அணுமின் நிலையம் முன்பு திரண்டு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த அணுமின் நிலைய அதிகாரிகள் மற்றும் கூடங்குளம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர். அவர்களிடம் அதிகாரிகள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக போராட்டம் நடைபெற்றது. இதனால் திருச்செந்தூர் – குமரி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தொடர்ந்து வள்ளியூர் போலீஸ் துணை சூப்பிரண்டு வெங்கடேசன் தலைமையிலான போலீசார் பேச்சு வார்த்தை நடத்தியும் உடன்பாடு எட்டப்படவில்லை. இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 50 பேரை போலீசார் கைது செய்து மண்டபத்தில் தங்க வைத்தனர்.

## அ.தி.மு.க.,வில் இருந்து நடிகை கவுதமி விலகல்!



சென்னை, ஜூன். 15–

சட்டசபை தேர்தலுக்கு பின், அ.தி.மு.க.,வில் இருந்து, முன்னாள் அமைச்சர்கள், நிர்வாகிகள், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் விலகி வருகின்றனர். அந்த வரிசையில், அ.தி.மு.க., கொள்கை பரப்பு துணைச்செயலராக இருந்த, நடிகை கவுதமி, கட்சியில் இருந்து விலகி உள்ளார்.

இது தொடர்பாக, அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமிக்கு அவர் எழுதியுள்ள, கடிதத்தில்கூறியிருப்பதாவது:

தற்போதுள்ள அரசியல் சூழலை கருத்தில் கொண்டு, நான் சமூக சேவை செய்ய ஏதுவாக, நான் வகித்து வரும், அ.தி.மு.க., அடிப்படை உறுப்பினர் மற்றும் கொள்கை பரப்பு துணைச்செயலர் பதவியில் இருந்து, கனத்த இதயத்துடன், ஜூன் 14ம் தேதி முதல் என்னை விடுவித்துக் கொள்கிறேன்.

கட்சியில் சேர்ந்த நாள் முதல் இன்று வரை, எனக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு அளித்த, முன்னாள் அமைச்சர்கள், தலைமை நிர்வாகிகள், பிற அணி மாநில செயலர்கள், மாவட்ட செயலர்கள், வட்ட செயலர்கள், பகுதி செயலர்கள், ஒன்றிய, நகர செயலர்கள் அனைவரையும் மனதார வணங்கி, நன்றி கூறி, கட்சியில் இருந்து என்னை விடுவித்துக் கொள்கிறேன். இவ்வாறு, அதில் கூறியுள்ளார்.

பா.ஜ.,வில் இருந்த கவுதமி, அக்கட்சியில் இருந்து விலகி, லோக்சபா தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க.,வில் இணைந்தார்.

அ.தி.மு.க., கொள்கை பரப்பு துணைச் செயலர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. தற்போது அ.தி.மு.க.,வில் இருந்து விலகியுள்ளார்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020